# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண் : 0811 / 2016/ ந

ஆணை எண் : 0029 / 2017

நாள் : 17 /03 /2017

திரு. எம். எஸ். முகமது சலிகு, முறையீட்டு மனுதாரர்
சென்னை – 1.

1.திரு. காந்திராஜன்,
முன்னாள் நகராட்சி ஆணையர்,
காயல்பட்டணம் நகராட்சி.

2.திரு. சிவக்குமார்,
நகராட்சி பொறியாளர்,
காயல்பட்டணம் நகராட்சி. எதிர் மனுதாரர்கள்

## ஆணை :

முறையீட்டு மனுதாரரது 08.08.2016 நாளிட்ட முறையீட்டு மனு 08.08.2016 அன்றே இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு எண் : 0811/16 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேற்படி முறையீட்டு மனுவில் காயல்பட்டணம் நகராட்சியில் விடப்படும் டெண்டர்களில் தொடர்ந்து முறைகேடுகள் நடைபெறுவதாகவும் 2016 ஆகஸ்ட் 24 வரை 15 பணிகளுக்கான டெண்டர் விளம்பரங்கள் வெளியிடப்பட்டதெனவும் அதில் நகராட்சி நிர்வாகத் துறை ஆணையரின் 22.07.2011 தேதிய சுற்றறிக்கை (ந.க.எண் 26134/2011/E3) விதிமுறைகள் கடைபிடிக்கப்பட-வில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2016, ஆகஸ்ட்-4 அன்று திறக்கப்பட்ட பணிகளுக்கான டெண்டர் ஆவணங்கள் எந்த இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம் என்ற விபரம் இணைக்கப்படவில்லை என்றும் 2016, ஆகஸ்ட் 24 அன்று திறக்கப்படவிருந்த துப்புரவு பணியாளர்கள் நியமனம் சம்பந்தமான டெண்டர் விளம்பரத்தில் கடந்த 25 ஆண்டுகளாக செயல்பாட்டில் இல்லாத ஒரு இணையதளத்தின் பெயர் குறிப்பிடப்பட்டதெனவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கீழ்காணும் புகார்களும் எழுப்பட்டுள்ளன :-

i. மேற்படி சுற்றறிக்கையின்படி 50 லட்ச ரூபாய்க்கு மேலான பணிகளுக்கான விளம்பரம் ஆங்கில நாளிதழின் தேசிய பதிப்புகளில் வெளியிடப்பட வேண்டுமென்ற விதிமுறை கடைபிடிக்கப்படவில்லை.

ii. சுற்றறிக்கைப்படி விளம்பரம் வெளியிடப்பட்ட ஒரு தினத்திற்குள் அதன் விபரங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு பதிவேற்றம் செய்யப்படாமல் தாமதமாகவே பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

iii. ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படுவது துவங்கும் நேரம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவது முடியும் நேரம் இரண்டிற்கும் ஒரே தேதி, நேரமும் குறிப்பிடப்பட்டது.

iv. இணையதளம் மூலம் (e–tender) ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க முடியாமல் செய்ததுடன் ஆகஸ்ட் 4 அன்று திறக்கப்பட்ட டெண்டருக்கான பதிவேற்றத்தில் குளறுபடி செய்யப்பட்டுள்ளது.

v. ஆகஸ்ட் 24 அன்று திறக்கப்படவிருந்த ஒப்பந்தப்புள்ளிகள் குறித்து எவராலும் இணையதளம் மூலம் (e–tender) சமர்ப்பிக்கப்படாத வகையில், ஒப்பந்தப்புள்ளி பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

vi. 9 டெண்டர்கள் கடந்த ஆண்டு e–tender முறையில் விடப்பட்டு நகராட்சியின் மதிப்பீட்டைவிட பல லட்சம் ரூபாய் குறைவான தொகைக்கு பலர் e–tender முறையில் பங்கேற்றனர். டெண்டர் யாருக்கு வழங்கப்பட வேண்டுமென்று நகராட்சி அதிகாரிகளும், சில அரசியல் பிரமுகர்களும், சில நகர்மன்ற உறுப்பினர்களும் முடிவு செய்துவிட்டதால் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பித்தவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்காமல் அதன் முடிவுகளை காயல்பட்டிணம் நகராட்சி ஆணையர் நகர் மன்ற கூட்டத்தில் சமர்ப்பிக்கவில்லை.

vii. அதே பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 2014 ம் ஆண்டில் நகர்மன்றம் ஒப்புதல் வழங்கிய அதே மதிப்பீட்டின்படி, இரண்டு ஆண்டுகள் கழித்து 2016 ம் ஆண்டில் கோரப்பட்டுள்ளது. இதன்மூலம் காயல்பட்டிணம் நகராட்சி தயார் செய்யும் மதிப்பீடுகள் போலியானவை என்பது நிரூபணம் ஆகிறது.

viii. E–Tender முறையில் ஏற்றுக்கொள்ளும் படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரினால், தாங்கள் ஏற்கனவே ஏற்பாடு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு பணிகளை வழங்க முடியாது என்ற காரணத்திற்காக, விபரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்துவிட்டு, இணையதளம் மூலம் எந்த ஒப்பந்தப்புள்ளியும் பெறமுடியாத அளவில் செய்துள்ளார்கள்.

எனவே, இது குறித்து விசாரணை செய்து முறைகேடுகளுக்கு காரணமான நகராட்சி ஆணையர் திரு.ம.காந்திராஜன் மற்றும் நகராட்சி பொறியாளர் திரு.சிவகுமார் ஆகியோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு முறையீட்டு மனுதாரர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. இதுகுறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு காயல்பட்டிணம் நகராட்சி ஆணையருக்கு அறிவிப்பாணை (மு.ம.எண் : 0811/16/ந , நாள் : 10.08.16) அனுப்பப்பட்டது. மேலும், மேற்படி புகார்கள் குறித்து நேரில் ஆய்வு செய்து உண்மை நிலை குறித்தான அறிக்கையினை அளிக்குமாறு 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 6(4)ன் கீழ் திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

4. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கான விசாரணை முறையே 04.10.2016 மற்றும் 05.10.2016 ஆகிய தேதிகளில் நிர்ணயிக்கப்பட்டு முறையே அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. இந்நிலையில் நடைபெறவிருந்த உள்ளாட்சி சாதாரண தேர்தல்களைக் கருதி 05.10.2016 அன்று நடைபெறவிருந்த விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

5. காயல்பட்டணம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்:299/2015/அ1 நாள் 09.09.2016ல் புகார் மனுவில் கூறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் Tender Transperancy Act ன் படி வெளிப்படைத் தன்மையுடன் கோரப்பட்டதெனவும் முறையாக நாளிதழ்களில் மின்னனு ஒப்பந்தப்புள்ளியாக கோரப்பட்டதெனவும் தற்போது வரை அறிவிப்பில் கண்ட எவ்வித பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

04.10.2016 அன்று விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர், தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்ட புகார்களை மீள வலியுறுத்தியும், 12.08.2016 நகர் மன்ற கூட்டத்திற்கான 10 பொருட்களில் 9 பொருட்கள் நகர் மன்றத் தலைவரால் அங்கீகரிக்கப்படாததால் மன்றத்தில் வைக்கப்படவில்லை எனவும் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை எனவும் ஸ்ரீ கங்கா எலெக்ட்ரிகல்ஸ் என்பவருக்கு சாதகமாக செய்வதற்காகவே புதிய கட்டுப்பாடு விதித்து விதிகள் உருவாக்கப்பட்டன எனவும் குறிப்பிட்டு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

6. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரது அறிக்கை ந.க.எண் : 3215/16/அ3, நாள்:17.10.2016ல், புகார் மனுவில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் Tender Transperency Act ன் படி வெளிப்படைத்தன்மையுடன் கோரப்பட்டதெனவும் முறையாக நாளிதழ்களில் மின்னனு ஒப்பந்தப்புள்ளியாக கோரப்பட்டதெனவும் தற்போது வரை அறிவிப்பில் கண்ட எவ்வித பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத்தெரிவிக்கப்பட்டு, காயல்பட்டணம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண் : 299/2015/அ1 , நாள் : 12.09.2016 இணைக்கப்பட்டுள்ளது.

7. முறையீட்டு மனுதாரரது 31.10.16 நாளைய மின்னஞ்சல் கடிதத்தில் 2014 ல் முறைகேடாக தயாரிக்கப்பட்டு நகர்மன்றத்தால் அனுமதிக்கப்பட்ட மதிப்பீடுகளே 2015 மற்றும் 2016 ல் அரசு டெண்டர் இணையதளத்தில் நகராட்சியால் வெளியிடப்பட்டதெனவும் அதிலும் பணி பொருள் வாரியான (Component wise) விவரங்கள் வழங்கப்படவில்லை எனவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து தொழில் நுட்ப அலுவலர் ஒருவரையும் உடன் வைத்து மனுதாரரை விசாரணைக்கு அழைத்து அவரது ஒவ்வொரு கோரிக்கை குறித்தும், அது தொடர்பான விதிமுறைகள் மற்றும் தொழில் நுட்ப அலுவலரது கருத்துக்களுடன் மனுதாரருக்கு தக்க விளக்கங்கள் அளித்து விவர அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைக்குமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை அசல் மனு எண் : 0811/16/ந2 , நாள் : 10.11.2016 ன்படி ஆணையிடப்பட்டது.

8. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களது 13.01.2017 நாளிட்ட அறிக்கையில் முறையீட்டு மனுதாரரை 23.12.2016 அன்று நேரில் வரவழைத்து விசாரித்ததுடன், தொழில் நுட்ப அலுவலரது கருத்துக்கள் அடங்கிய கூடுதல் விளக்கங்களும் வழங்கப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையுடன் இணைக்கப்பட்டிருந்த தொழில் நுட்ப அலுவலரது கூடுதல் விளக்கங்களை பரிசீலித்ததில் காயல்பட்டணம் நகராட்சியின் ஆணையாளர் (பொ) -ஆக உள்ள நகராட்சி பொறியாளர், இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிய 21.11.2016 நாளிட்ட அறிக்கையின் நகலே மனுதாரரிடம் வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் இம்முறைமன்ற நடுவத்தால் நிர்ணயிக்கப்பட்ட பொறுப்பினை முறையாக செய்யத் தவறியுள்ளதுடன், ஏற்கனவே இம்முறைமன்ற நடுவத்திற்கு நகராட்சி ஆணையரால் அளிக்கப்பட்ட அறிக்கையின் நகலினையே மனுதாரருக்கு வழங்கியுள்ளதுடன், தனது அறிக்கையினையும் "ஓ.மு" எனக் குறிப்பிட்டு பொறுப்பினை தட்டிக் கழித்து கோப்பினை முடித்துள்ளது கண்டனத்துக்குரியதாகக் கருதப்படுகிறது.

9. அதேபோன்று முறையீட்டு மனுதாரரும் தனது 02.02.2017 நாளிட்ட மனுவில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால், தான் திருநெல்வேலிக்கு அழைக்கப்பட்டு மேற்படி கடித நகல் மட்டுமே வழங்கப்பட்டது என்றும் எந்த விளக்கங்களும் வழங்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், உயர்மின் கோபுரங்கள் பணிகளுக்கு ஸ்ரீ ஜோதிவேல் ஹார்டுவேர்ஸ், திருநெல்வேலி என்ற நிராகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து, தகுதியில்லாத நிறுவனத்திடமிருந்து நகராட்சி மதிப்பீட்டுத் தொகை கோரியுள்ளதெனவும், ஏற்கனவே தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொண்டுவரும் ஸ்ரீகங்கா எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்திற்கு டெண்டர் வழங்கப்படவே நகராட்சி அதிகாரிகள் அனைத்து முறைகேடுகளிலும் ஈடுபட்டனர் எனத் தெரிவித்தும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், இந்நகராட்சியில் விடப்படும் அனைத்து டெண்டர்களும் (Class I to Class 5) e Tender அடிப்படையில் மட்டுமே பெறப்பட வேண்டுமெனவும் நேரடியாக பெறப்படக்கூடாததெனவும் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார்.

10. இம்முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள புகார்களை உள்ளடக்கிய (காயல்பட்டணம் நகராட்சியில் பணிகளுக்கான டெண்டர் முறைகேடுகள்) பிறிதொரு முறையீட்டு மனு எற்கனவே முன்னாள் காயல்பட்டணம் நகராட்சித் தலைவி திருமதி. ஐ. அபிதா சேக் என்பவரிடமிருந்து

வரப்பெற்றது. அது குறித்து இம்முறைமன்ற நடுவ ஆணை எண்:0186/2016, நாள் : 03.12.2016 நகர்மன்ற அனுமதி பெறாமல் செயல்படுத்திய பணிகள் குறித்து நேர்மையான அலுவலர்கள் அடங்கிய குழு அமைத்து முறைகேடுகள் குறித்து தெளிவாக கண்டறிந்து உரிய முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை இம்முறைமன்ற நடுவம் கேட்டுக் கொண்டுள்ளது.

இம்முறையீட்டு மனுதாரரது புகார்கள் மற்றும் கோரிக்கைகள் குறித்தும் மேற்படி அலுவலர் குழு மூலம் ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு தக்க ஆணைகள் வழங்கப்படலாமென இம்முறைமன்ற நடுவம் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.




–//ஒம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பபடுகிறது/

செயலர் 28/3/2017

பெறுநர்

1. திரு. எம். எஸ். முகமது சலிகு,
   பழைய எண். 37, புதிய எண். 86,
   முத்துமாரி செட்டி தெரு, சென்னை - 600 001.

2. நகராட்சி ஆணையர்,
   காயல்பட்டணம் நகராட்சி,
   தூத்துக்குடி மாவட்டம் - 628 204.

3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   திருநெல்வேலி மண்டலம்.

4. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
   எழிலகம்,
   சேப்பாக்கம், சென்னை – 600 005.